1972 மார்ச் 15]

பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம்

* 510 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம் சென்னை நகரத்தில் மட்டும்தான் அமுல் செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், தமிழ்நாடு முழுவதும் அமுல் செய்ய அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: கேள்வி மெட்ரூஸ் சிடியைப்பற்றி இருந்தாலும் கேட்கிறேன். மொத்தம் நான்கு, ஐந்து ஆண்டுக்காலம் ஆகும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது, எனவே, துரிதமாக ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே முடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு துரிதமாக கார்ப்பரேஷனிலே வேலைகள் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பிச்சைக்காரர்கள் ஐந்தாயிரம் ஆறாயிரம் பேர்கள் என்று இருந்தால், அவர்களை திடீரென்று விடுதிகளில் அமர்த்திவிட்டால் அதோடு முடிந்துவிடும் பிரச்னையல்ல. நான்காயிரம் பேர்களை விடுதிகளில் சேர்த்துவிட்டால் இன்னும் ஆயிரம் பேர்கள் கிளம்புவார்கள். எனவே இதையெல்லாம் சேர்த்துத்தான் ஐந்தாறு ஆண்டுக்காலம் ஆகும் என்று குறிப்பிட்டேன்.

திரு. கோவை செழியன்: பிச்சைக்காரர்களை விடுதிகளிலே அமர்த்தினாலும் அவர்கள் தப்பி ஓடிவிடுகிறார்கள். ஆகவே அவர்கள் அவ்வாறு போகாமல் இருப்பதற்கு பிச்சைக்காரர் மாநாடு ஒன்றை நடத்தி அவர்களுக்கு அறிவுரைகள் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து (சிரிப்பு) அந்த மாநாட்டை நடத்தினால் சிறப்பாக இருக்கும்.

திரு. துரை. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, தொழுநோய்ப் பிச்சைகாரர்கள் எந்த மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடஆற்காடு, திருச்சியினுடைய ஒரு பகுதி, தஞ்சையில் ஒரு பகுதி, சேலத்தில் ஒரு பகுதி ஆகிய இடங்களில் எல்லாம் தொழுநோய் பிடித்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இந்தத் தொழுநோய்க்கு ஆளான காரணத்தினாலே சிலர் பிச்சைக்காரர்களாகவும் மாறுகிறார்கள்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether there is any proposal to open Beggar Homes in every district of the State?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இப்பொழுது பர்கூரிலே துவக்க இருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் துவக்குவதாக யோசனை இல்லை. எங்கே அவர்கள் அதிகமாக இருக்கிறார்களோ அங்கே சுகாதார வசதியுள்ள இடமாக, திறந்தவெளி அதிகமாக உள்ள இடமாக இருக்கிறதோ ஆயிரம் பேர்களுக்கு வசதி செய்யக்கூடிய நிலைமை எங்கே இருக்கிறதோ அந்த இடத்தைத் தேர்ந்து எடுக்கிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: பிச்சைக்காரர்களுக்கு உதவி செய்வதற்காக சோஷியல் வெல்பேர் போர்டிலிருந்து கொடுக்கப்பட்ட கிராண்ட் நிறுத்தப்பட்டிருக்கிறதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன். தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் எந்த விதத்தில் விடுதிக்கு வந்துசேருகிறார்கள். காவல்துறைமூலமாக அந்த வசதிகளைச் செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, அரசாங்கம் கொடுத்துள்ள கிராண்ட் இப்பொழுது எதுவும் நிறுத்தப்படவில்லை. தொழுநோய் பிடித்த பிச்சைக்காரர்களுக்கு இந்த இல்லத்தைக்கட்டி அவர்களின் மறுவாழ்வுக்காக நடவடிக்கை எடுத்த பிறகு சிலர் குடும்பம் குடும்பங்களாக அவர்களாகவே வருகிறார்கள். ஆனால் முறைப்படி தொழுநோய் பிச்சைக்காரர்களை போலீசார் சட்டப்படி கைது செய்து வழக்கு மன்றத்தில், பிச்சை எடுத்தார்கள் என்று போலீசார் மூலம் நிறுத்தப்பட்டு, சேர்க்கப்படுகிறார்கள். நாம் செய்யும் உதவிகளை அவர்கள் மனமுவந்து ஏற்றுக்கொண்டு, வருபவர்களும் தங்கி விடுகிறார்கள், சிலர் தாமாகவே வந்து சேர்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன்: சார், முதலமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது பிச்சைக்காரர்கள் திடீரென்று தோன்றவில்லை என்று கூறினார்கள். சமுதாயத்திலே உள்ள பொருளாதாரச் சீர்கேடுகளின் காரணமாகவே பிச்சைக்காரர்கள் தோன்றுகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

1972 மார்ச் 15]

பொருளாதார சீர்கேடுகளில் மாற்றம் வரும்வரையில் பிச்சைக்காரர்கள் தொடர்ந்து இருப்பார்கள் என்பதுதான் உண்மை. ஆகவே இந்தப் பிச்சைக்காரர்கள் பாதுகாக்கப்படும் அதேநேரத்திலே பிச்சைக்காரர்களாக ஆகப் போகின்றவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க இந்த நிதியிலிருந்து ஏதேனும் செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பொருளாதாரச் சீர்கேட்டைச் சீரமைப்பது என்பது ஒன்று. பொருளாதாரச் சீர்கேட்டினால் ஏற்பட்டிருக்கும் விளைவுகளைச் சமாளிப்பது என்பது ஒன்று. வயிற்றுவலி ஏற்பட்ட காரணத்தினால் தலைவலி ஏற்படுகிறது. வயிற்றுக்கோளாறைத் தனியே தீர்க்க வேண்டுமென்று கருதி தலைவலிக்கு மருந்து தடவிக் கொள்கிறோம். அதற்காக வயிற்றுவலியை மறக்கவில்லை, சிகிச்சை அளிக்கிறோம். அதேபோல் பொருளாதாரப் பிரச்னைகளைச் சந்தித்துச் சமாளிக்க வேண்டும். மேலும் அந்தப் பொருளாதாரச் சீர்கேடுகளினால் ஏற்பட்ட விளைவுகளையும் சமாளிக்க வேண்டும். இப்பொழுது விளைவுகளைச் சமாளிக்கும் கட்டத்தில்தான் பிச்சைக்காரர்களின் மறுவாழ்விற்காக அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

* 511. வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியில் இருந்து அனாதைப் பள்ளிகளுக்கு நிதி உதவும் திட்டம் ஏதாவது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இப்படிப்பட்ட அனாதை விடுதிகளிலிருந்து, அரசாங்கம் கொடுக்கும் உதவித்தொகை மிகவும் குறைவாக இருக்கிறது என்று மனுக்கள் ஏதேனும் வந்திருக்கிறதா ? இனிமேலாவது அதிக உதவி செய்யத் திட்டமிடுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட மனு ஏதும் இது வரையில் வரவில்லை.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, தமிழக அரசு இப்பொழுது 3 பிச்சைக்காரர்கள் விடுதிகளைக் கட்டியிருப்பதாகச் சொல்லப்பட்டது. காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே எத்தனை விடுதிகள் கட்டப்பட்டன என்பதற்குத் தகவல் இருக்கிறதா ?